**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, PATTUKKOTTAI**

**CASE No. STC.73/2022**
**Prosecution of Witness : PW1**

| | |
|---|---|
| Name: **திரு.முருகுபாண்டியன்** | Caste : -- |
| Father Name : **ராவுத்தசாமி** | Calling : -- |
| Village : **பொன்னவராயன்கோட்டை** | Religion : -- |
| Taluk : **பட்டுக்கோட்டை** | Age : 49/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of June 2023.

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு.செல்வராஜ் bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**எதிரி தரப்பில் முதல் விசாரணை**

1)நான் ரியல் எஸ்டேட் மற்றும் டிராவல்ஸ் ஏஜென்சி தொழில் செய்து வருகிறேன். எனக்கு ஒரு லட்சம் வரை மாத வருமானம் வரும். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். எதிரி திருச்சி கருமண்டபத்தில் அல்கபிஸ் டிராவல்ஸ் என்ற பெயரில் தொழில் நடத்தி வந்தார். அதனால் எதிரியை தெரியும் . 28.02.2022 அன்று பட்டுக்கோட்டையில் என்னுடைய வீட்டில் வைத்து மாலை சுமார் 05.30 மணியளவில் எதிரிக்கு பணம் கொடுத்தேன். அப்போது நான் மட்டும்தான் இருந்தேன். வேறு யாரும் இல்லை. 20 ஆயிரம் தொகைக்கு மேல் பணம் கொடுக்கும்போது வங்கி மூலமாகதான் கொடுக்க வேண்டும் என்று எனக்கு தெரியும். ஆனால் எதிரியின் சூழ்நிலை காரணமாக கொடுத்தேன். எதிரி மருத்துவ செலவிற்காக கடன் கேட்டார். இந்த விவரத்தை நான் எனது புகார் மனுவில் சொல்லியுள்ளேன். நான் குடும்ப செலவிற்கு பணம் கேட்டார் என்று புகார் மனுவில் சொல்லியுள்ளேன்.

2)வா.சா.ஆ-1 காசோலையில் கையொப்பம் ஒரு பேனா மையினாலும், மற்ற விவரங்கள் பூர்த்தி செய்தது வேறு பேனா மையினாலும் உள்ளது என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவுப்பு Left without Instruction என்று திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் Door Locked, First Intimation என்று திருப்பப்பட்டுள்ளது. எதிரியின் திருச்சியில் உள்ள அலுவலகத்திற்கு நான்

அடிக்கடி சென்றுள்ளேன். எதிரி வெளிநாட்டிற்கு நான்கு நபர்களை அனுப்பியுள்ளாரா என்றால் எதிரி அவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி அவர்கள் மீண்டும் வேலை இல்லாமல் வந்துவிட்டார்கள். கொரணா ஊரங்கிற்கு முன்பு 6 நபர்களை கனடாவிற்கு அனுப்ப சொல்லி எதிரியிடம் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கொரணா ஊரடங்கு சமயத்தில் Visiting VISA மட்டும் வெளிநாட்டிற்கு கிடைத்தது என்றும், Global Service VISA ஏற்படுத்தி கொடுத்தார் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி மோசடியாக பணத்தை அந்த நபர்களிடமிருந்து வாங்கிக்கொண்டு VISA எடுத்துக்கொடுக்காமல் ஏமாற்றிவிட்டார். அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்துள்ளேன் ஆனால் மனு ரசீது எதுவும் வாங்கவில்லை.

3)26.02.2020 அன்று எதிரியின் திருச்சி K.K நகரில் உள்ள யா சூப்பர் மார்க்கெட்டில் சென்று எதிரியின் கடையில் வேலைப்பார்க்கும் சீனி என்ற நபரை கடத்தி சென்று மிரட்டியதாக K.K நகர் காவல்நிலையத்தில் புகார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அது பொய் புகார். ஆனால் நான் மிரட்டவில்லை. சீனி என்பவரை மீண்டும் நானே அழைத்து வந்து காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. எதிரியும் நானும் சட்டவிரோதமாக உரிமம் இல்லாமல் வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்பி தொழில் செய்து வருகிறோம் என்றாலும் அந்த தொழிலில் கமிஷன் கொடுப்பதில் ஏற்பட்ட பிரட்சனை இருந்து வந்தது என்றாலும் சரியல்ல. நான் சட்டவிரோதமாக தொழில் எதுவும் செய்யவில்லை. எதிரி நான் சொல்வதுபோல் நான் சொல்லும் தேதியில் சட்டபூர்வமான கடன் எதுவும் என்னிடம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி வேறு நபர்கள் துணையின்றி எங்கும் வரமுடியாது என்றாலும் அதனால் அவர் பட்டுக்கோட்டைக்கு வந்து கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி கொடுக்க வேண்டிய கமிஷன் தொகைக்கா அவருடைய காசோலையை எதிரி அலுவலகத்திற்கு நான் வந்து செல்லும் சமயத்தில் திருடிக்கொண்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

4)எதிரி தனது வங்கியில் 17.09.2021 அன்று தனது காசோலை திருடுபோய்விட்டதாக வங்கியில் Stop Payment கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கடன் கொடுப்பதாக சொல்லும் தேதிக்கு முன்பே இருவருக்கும் பிரட்சனை ஏற்பட்டுள்ளதால் நான் சொல்லும் தேதியில் எதிரிக்கு கடன் கொடுக்க வாய்ப்பு இல்லை என்றாலும் 28.02.2022 ம் தேதி எந்தவித சட்டபூர்வமான கடனும் என்னிடமிருந்து எதிரி வாங்கவில்லை என்றாலும்

அதற்காக எதிரி என்னிடம் காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியிடமிருந்து திருடப்பட்ட காசோலையை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/ Murugupandiyan
Signature of witness

*Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.*

*Sd/- K.Sathya, B.Sc.,B.L.,*
Judicial Magistrate,
Fast Track Court (Magisterial Level)
Pattukkottai

webcopy